www.padippakam.com

# உறவு

**மார்க்சிய தத்துவ இதழ்**

தாஸ்னா பதிவு எண் : 230 / 18 / 99

ஏப்ரல் 2000 | இதழ் - 9 | விலை : ரூ. 5-00



# தனியார் மயமாக்கல் - புதிய பார்வை

படிப்பகம்

www.padippakam.com



## அன்பிற்குரிய வாசக தோழர்களே!

'உறவு' தனக்கென தமிழகத்தில் வாசகர்களை கொண்டுள்ளது. அதோடு புதிய அரசியல் சித்தாந்தப் போக்கை முன் நிறுத்தி சமுதாய மாற்றத்திற்கான தனது பணியை செய்து வருவது தாங்கள் அறிந்ததே! மற்றும் அந்தவகையில் 9-ம் இதழ் உங்கள் கையில்...

'உறவு'-ன் வளர்ச்சியை எடுத்துக்காட்டும் இருநிகழ்வுகள். முதலாவது, ஒரு இதழின் வளர்ச்சிக்கு முக்கியமானது விமர்சனத்தை எதிர்கொள்வது. சுயவிமர்சனம் செய்து தன்னை திருத்திக் கொள்வது. இதற்குச் சான்றாக கடந்த 5-12-99 அன்று வாசகர் சந்திப்பை நடத்தி தனது இலட்சிய பயணத்தை உறுதி செய்தது.

இரண்டாவது, தமிழ் சிற்றிதழ் சங்கம் (தாஸ்னா) 1999-ம் ஆண்டிற்கான சிறந்த இதழ்களில் மூன்றாம் இதழாக தெரிவு செய்யப்பட்டு ஊக்கப் பரிசு அளித்து சிறப்பித்தது.

'தாஸ்னாவிற்கு' உறவு தனது நன்றியை உரித்தாக்குகிறது.

உறவு இதழை 'சிற்றிதழ் அறிமுகம்' பகுதியில் அறிமுகப்படுத்திய இதயம் பேசுகிறது (24-10-99 இதழில்) இதழுக்கு உளம்கனிந்த நன்றி!

உறவு சமுதாய மாற்றத்தை விரும்புகிறது; அதற்கே பணிசெய்கிறது. அந்த வகையில் சிந்தனையாளர்களை - புரட்சியாளர்களை உருவாக்கும் வகையில் சமுதாயத்தில் மார்க்சியக் கண்ணோட்டத்தை வளர்ப்பது; பரப்புவதே!

எனவே தான் விவாதங்களுக்கு அடிப்படையாக புதிய சிந்தனைகளை தாங்கிய கட்டுரைகளை முன்வைக்கிறது. விமர்சனங்களை எதிர் நோக்குகிறது. துரதிர்ஷ்டவசமாக உறவு முன்வைத்த விமர்சனங்களுக்கு உரியவர்கள் மௌனமாகவே இருந்து வருகின்றனர். அவர்களின் மௌனத்திற்கு காரணம் என்ன எனவும் வரும் 'உறவு'ல் கட்டுரை தீட்ட உள்ளோம்.

இருந்த போதிலும், ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறுபதம் என்றபடி உறவுக்கு விமர்சனமாக, கேள்வியாக, பாராட்டாக கடிதம் வந்த வண்ணம் உள்ளன. அவை சென்ற இதழில் குறித்தது போல் வெளியிட இயலாமைக்கு வருந்துகிறோம்; காரணம் இடமின்மையே! அடுத்த இதழில் வரும் என உறுதி அளிக்கிறோம். வாழ்த்துக்களுடன்!!

- ஆசிரியர்

**முந்தைய இதழ் பெற - 1 முதல் 9 வரை - ரூ. 70-00**

**தனி இதழ் : ரூ. 5.00**

**ஓராண்டுசந்தா : ரூ. 50.00**

**(தபால் செலவு உள்பட)**

படிப்பகம்

www.padippakam.com



# கட்டுரைக்கு முன் சில வார்த்தைகள் . . .

அன்புக்குரிய தோழர்களே! இக்கட்டுரை எழுதுவதற்கு முக்கியக் காரணம், உறவு - 5 ம.ஜ.இ.க.விற்கு ஒருகடிதம் என்பதில் தனியார் மயத்தை விமர்சன பூர்வமாக பார்க்கவேண்டும் என்றபடி கடிதம் எழுதி இருந்தோம். அது குறித்து தோழர் சிலப்பதிகாரம் (சென்னை) விமர்சனக் கடிதம் தீட்டி இருந்தார். அவரின் கடிதம் மற்றும் உறவு'ன் பதிலும் உறவு இதழ்-6-ல் இடம் பெற்று இருந்தது.

அதாவது, இன்று "தனியார்மயத்தை எதிர்ப்பது இச்சமூக அமைப்பில் அங்கமாக இருக்கும் அரசு முதலாளித்துவத்தை கட்டிக்காக்கின்ற வேலையாகிறது' என்ற வரிகளில் வருகின்ற கருத்துக்களை விமர்சிக்க விரும்புகிறேன்" (உறவு-6 பக்:13 சிலப்பதிகாரம் கடிதம்) இதற்கு பதிலாக நாம் எழுதினோம். "...இழப்புதற்கொன்றுமில்லாத பாட்டாளி வர்க்கத் தலைமையில்", சமுதாயப்புரட்சி என்பதை மறுப்பதாகிறது. பிரபுக்குல பாட்டாளி வர்க்கத் தலைமையிலேயே தன் வாழ்நிலையை தக்க வைத்துக் கொண்டே என சொல்லக்கூடும். புரட்சியை முன் எடுப்பது கற்பனைவாதக் கண்ணோட்டமே தவிர; பாட்டாளிவர்க்க கண்ணோட்டம் அல்ல என அறிக. புரட்சிகர பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் மற்ற வர்க்கங்களின் நலன் பாதிக்கப்படுவது குறித்து குரல் கொடுப்பது தவறு இல்லை; அது அவர்களை வருங்காலத்தில் பாட்டாளி வர்க்கமாக மாற்றும் என்றபடி பிரச்சார நோக்கில் கணக்கில் எடுக்கலாம். "இந்த விதத்தில் வேண்டுமானால் தனியார் மயமாக்கல் எதிர்ப்பு முன்கொண்டு செல்லலாம்" (உறவு-6 பக்கம் 24)

இந்த வாக்குறுதியை இக்கட்டுரை மூலம் நாம் அடுத்த கட்டத்திற்கு விவாதத்தை நகர்த்தி உள்ளோம் எனவும் வாசகருக்கு ஞாபகப்படுத்துகிறோம். மேலும் உறவு-6 இதழின் எமது விமர்சனத்திற்கு சிலப்பதிகாரம் பதில் விமர்சனம் கடிதம் 20-2-99-ல் எழுதி உள்ளார். அது அடுத்த இதழில் வரும் அந்த அவருடைய கடிதத்தில் காணப்படும் கருத்துக்களுக்கும் இக்கட்டுரையில் பதில் உள்ளது என்று அவருக்கும் வாசகர்களுக்கும் தோழமையுடன் தெரிவிக்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com



# தனியார்மயமாக்கல்

## - புதிய பார்வை.

இன்று நடைமுறைப்படுத்தப்படும் தனியார்மயமாக்கல் என்பது நடப்பில் இருக்கும் அரசுத்துறை, பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு தாரை வார்ப்பதை குறிப்பதாகும். இந்தத் தனியார்மயமாக்கல் என்பதும் கூட பன்னாட்டு நிறுவனங்கள் உலகச் சந்தையை நிறுவுவதற்காக முன் வைக்கப்படும் கொள்கை நடைமுறையின் ஓர் அங்கமாகும். இதற்கு உள்நோக்கம் இல்லாமல் இல்லை. அதாவது புரட்சிக்கு பிந்தைய ரஷ்யா, சீனா போன்ற நாடுகளிலும் சரி, இந்தியா போன்ற வளர்முக நாடுகளிலும் சரி பன்னாட்டு நிறுவனங்கள் தங்களுக்கு சந்தை வாய்ப்பை உருவாக்குவதாகும்.

இந்தத் தனியார்மயமாக்கல் தேசம், நாடு என்ற எல்லை கடந்து உலகையே ஒரே நாடாக்கும் முயற்சியும் ஆகும். இம்முயற்சி செயல்படுத்தப் படுவதையொட்டியும் வெவ்வேறு சமூக பொருளாதார அரசியல் அடிப்படைகளைக் கொண்டும் இருவகைப்படுத்தலாம். ரஷ்யா, சீனாவில் நடைமுறைப்படுத்தப்படுவது இந்தியா போன்ற வளர்முக நாடுகளிலும் செயல்படுத்தப்படுவது எனலாம். என்றாலும், ஒரே நோக்கத்திற்காக செயல்படுத்தப்படுகிறது என்றபடி சாரமாக ஒன்றாகவே உள்ளது.

இந்நூற்றாண்டில் தான் இருவேறுபட்ட சமூக பொருளாதார அமைப்புக் கொண்ட நாடுகளில் அரசுத்துறை பொதுத்துறை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. இதை முற்போக்கான செயல் எனக் கருதினால் ஏன் உருவாக்கியவர்களே மற்றும் அதை அனுமதித்தவர்களே ஏன் அழிப்பதை செய்யவேண்டும்? இது பிற்போக்கான செயல் அல்லவா?

ஏன் முற்போக்கான அரசியல் நடவடிக்கையை மேற்கொண்டவர்கள் பிற்போக்கான அரசியல் நடவடிக்கையை கைக் கொள்ள நேர்ந்தது? இதற்கு அரசியல் சமூக பொருளாதார காரணங்கள் என்ன? என்பது ஆழ்ந்து நோக்கத்தக்கது.

பொதுவாகவே மார்க்சின் கண்ணோட்டம் தெரிவிக்கிறது, ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தில் முற்போக்கானது எனக் கருதும் சூழலில் பிற்போக்கானது என்பதன் கரையும் படிந்திருக்கிறது என்றாலும் அந்த பிற்போக்கானது என்ற அம்சத்தையும் மீறி பெரும்பான்மையாக அன்று முற்போக்கானது என்பது சரியானதாகிறது. நடைமுறை அறிவுக்கு பொருத்தமானதாகிறது. அதே நேரத்தில் வளர்ச்சிப்போக்கில் முற்போக்கானது என்ற அம்சத்தையும் மீறி பிற்போக்கானது முன்னுக்கு வருகிறது; ஆளுமை பெறுகிறது. எனவே பிற்போக்கு முற்போக்காகிறது. இத்தகைய முற்றும் மாறுபட்ட முடிவுக்கு காரணம் என்ன? முற்போக்கு என்பதும் சரி, பிற்போக்கு என்பதும் சரி அதன் தோற்ற காலத்தில், வளர்ச்சிப்படியில், அதுவும் அந்தக்

படிப்பகம்

www.padippakam.com



குறிப்பிட்ட கட்டத்தில் பெறப்பட்ட முடிவாகும். அதாவது முற்போக்கு பிற்போக்கு என்பது அந்தக் குறிப்பிட்ட கட்டத்திற்கு மட்டுமே பொருந்தும். அதற்கும் மேல் அல்ல. எனவே முற்போக்கு பிற்போக்கு என்பதை சூழலை விலக்கி பொருள் கொள்வதோ, முடிவு செய்வதோ சரியல்ல; அறிவுக்கு பொருத்தமற்றதும் ஆகும்.

ஆகவே தான் மார்க்சியவாதிகள் நிரந்தரமான உண்மை, எல்லாக் காலத்துக்குமான உண்மை என்பது கற்பனையில் மட்டுமே இடம் பெற முடியும். நடைமுறையில் அல்ல என்பர்.

இக்கண்ணோட்டப்படி பார்த்தால் அரசுத்துறை பொதுத்துறை நிறுவனங்களை அன்று உருவாக்க வேண்டிய வரலாற்று காரணங்கள் என்ன? இன்று அந்நிறுவனங்களை அழிக்க வேண்டிய சமுதாய வரலாற்றுக் காரணங்கள் என்ன? என்று காண்பது அவசியம். இந்த சமுதாய வரலாற்றுக் காரணங்களை கணக்கில் கொள்ளாமல் எதிர்ப்பது அல்லது ஆதரிப்பது என்பது தவறானதாகிவிடும். அறிவுக்கு பொருத்தமற்றதாகும். வரலாற்றின் போக்கை புரிந்து கொள்ள மறுப்பதாகிவிடும். மேலும் அந்த நமது முடிவும் கூட தனிப்பட்ட வெறுப்பு அல்லது விருப்பின் அடிப்படையில் அமையக் கூடும். எதிர்கால சமுதாய நலனை கணக்கில் கொள்ளாத குருட்டுத்தனமான நடவடிக்கைக்கு ஊக்கமளிப்பதாக முடியக்கூடும்.

எனவே நாம் மேலே கண்ட வெவ்வேறுபட்ட சமூக பொருளாதார அமைப்புக் கொண்ட நாடுகளின் வளர்ச்சியில் - மாற்றத்தில் நாம் காணும் தர்க்கபூர்வமான போக்கை விரிவாக காண்பது அவசியம்.

## 1. ரஷ்யா, சீனாவில் பொதுத்துறை நிறுவனங்கள் வளர்ச்சியும் வீழ்ச்சியும்

ரஷ்யாவில் (சோவியத்யூனியனில்) தோழர் லெனின் தலைமையில் புரட்சி நடைபெற்றது. தொழிலாளிகள் - விவசாயிகள் வர்க்க கூட்டுச் சர்வாதிகாரம் நிறுவப்பட்டது. தொழிற்சாலைகள் தேசத்தின் உடைமையாக்கம் செய்யப்பட்டது. விளை நிலங்களை கூட்டுப் பண்ணைகள் மற்றும் அரசுப் பண்ணைகளாக மாற்றினர். (இங்கு ஒரு விசயம் மறந்துவிடலாகாது. அதாவது லெனின் விவசாயி வர்க்கத்தை கையாள்வதில் கவனமாக இருக்கவேண்டும். இதில் அவசரம் காட்டக்கூடாது. நெளிவு சுளிவு கடைப்பிடிக்க வேண்டும் என எச்சரித்து இருந்தார். ஆனால் ஸ்டாலின் இது விசயத்தில் சற்று கவனமற்று இருந்தார் என்பது மட்டும் இங்கு குறித்துக் கொள்ளத்தக்கது.) (1)

இந்நிறுவனங்களின் உற்பத்தி, கொள்முதல் விற்பனை அனைத்தும் அமைப்பு ரீதியாக கொண்டுவரப்பட்டது. இதில் எந்த தனியொருவரும் முடிவெடுக்க இயலாது. ஏனென்றால் யாரொருவருக்கும் தனிப்பட்ட சொந்தமாக எதுவும் இல்லை. எனவே நிறுவனத்தின் செயல்பாட்டில் லாபம் என்பது இலக்கு அல்ல. சமுதாயத்தின் ஒட்டுமொத்த நலனே முக்கியம் என கணக்கில் கொள்ளப்பட்டது. சமுதாயத்தில் எந்த வகையிலும் சுரண்டுகிற

படிப்பகம்

வகையான நடைமுறை படிப்படியாக ஒழிப்பதில் கவனம் குவிக்கப்பட்டது. சுருக்கமாகச் சொன்னால் சமுதாயத்தின் தேவையின் விகிதத்தை கணக்கில் கொண்டு உற்பத்தியின் இலக்கு தீர்மானிக்கப்படும். தேவையின் விகிதத்தை கணக்கில் கொள்ளாமல் முதலாளித்துவ நாடுகளில் லாபம் ஒன்றே குறிக்கோள் என்ற உற்பத்தி நடைமுறையிலிருந்து (இதை அராஜக பொருள் உற்பத்தி என்றும் அழைப்பர்) எதிரானதாகும்.

ஏனென்றால், இந்த அராஜகப் பொருள் உற்பத்தி நடைமுறை தான் முதலாளித்துவ சகாப்தத்தில் வர்க்கங்கள் இருப்பு மற்றும் போராட்டத்திற்கு அடிப்படையாக உள்ளது. எனவே நான் முதலாளித்துவ சமுதாயத்திற்கு மாற்றாக அமையும் சமுதாயத்தில் ஒட்டு மொத்த் தேவையை ஓட்டி உற்பத்தியை நிறுவனமயப்படுத்துகிறோம்.

இதன் பின்விளைவாக சமுதாயத்தில் நடைபெறும் வர்க்கப் போராட்டத்தை நமது இலட்சிய நோக்கத்திற்கு ஏற்ப மாற்றி அமைக்க முனைகிறோம். ஏன் வர்க்கங்களையே ஒழித்திட அடிப்படை அமைக்கிறோம்.

அதாவது சமுதாய நடப்பில் வர்க்கங்களும் வர்க்கப்பகைமைகளும் மறையச் செய்ய வேண்டும். இதை முன்எடுக்கும் வகையில் சமுதாய அங்கத்தினர் அனைவரும் தகுதிக்கேற்ற உழைப்பை நல்க வேண்டும்; தனது திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும். இதுவும் காலப்போக்கில் ஒவ்வொருவரும் தங்களால் முடிந்த அளவு (உயர்ந்தபட்சமாக) உழைப்பைச் செய்யவேண்டும். தங்களுக்கு தேவையான அளவு ஊதியத்தை பெற்றுக் கொள்ள வழிசெய்யப்படும்.

மேலும் உற்பத்தியில் அன்றாடம் தொழில்நுட்ப மேம்பாடு, உற்பத்தியில் உயர்ந்த விகிதம், இதைச் சாதிக்க புதிய உற்பத்திக் கருவிகள் புகுத்துதல். இதன்மூலம் சமுதாயத்தில் ஆண், பெண் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவரும் உற்பத்தி நடவடிக்கையில் பங்கேற்க வழிவகை செய்யப்படும். ஊதியம் அளிப்பதிலும் கூட பாலின வேறுபாடு களையப்படும்.

சுருக்கமாகச் சொன்னால் எந்த வகையிலும் ஒருவரை ஒருவர் சுரண்டுவதற்கு இடமில்லாத வகையில் சுரண்டலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். முடிவில், சமுதாயத்திற்கும் தனிமனிதனுக்குமான உறவு நெருக்கமாக இருக்கும். தனிமனித நலன், சமுதாய நலன் என்ற பாகுபாடு இருக்காது. எல்லோரும் ஒவ்வொருவருக்காக, ஒவ்வொரு வரும் எல்லோருக்காக என்பதாக இருக்கும்.

**ஆனால் நடந்தது என்ன?**

கட்சிமுன் வைத்த திட்டங்களும் அதன் வழியிலான நடைமுறைகளும் தேவைக்கான உற்பத்தி என்பதை கனவாக்கியது. நமது இலட்சியம் பெயரளவுக் கானதாகியது.

அதாவது கட்சியின் திட்டமிடுதலின்படி உற்பத்தியில் பல்வேறு வகையினங்கள் குறைந்தன. சிலவகையினங்கள் மட்டுமே அதிகமாக இருந்தன. குறிப்பாக விவசாய பண்டங்கள் உற்பத்தி குறைந்து இருந்தன. **(2)** தேவை

www.padippakam.com



அதிகமிருந்தது. இதற்கு பருவ காலநிலைகளும் திடீரென்று எழும் இயற்கை சீற்றங்களும் கூட காரணமாக அமைந்தன. இது போன்ற விசயங்கள் கணக்கில் எடுக்கத் தவறியதும் நமது திட்டமிடுதலில் உள்ள குறைகள் எனலாம்.

மேலும் சந்தைப் பொருளாதார அமைப்பில் பொருள்களின் வரத்து மற்றும் தேவைக்கு ஏற்ப சமுதாயத்தில் விலை நிர்ணயிப்பதாக இருக்கிறது. குறிப்பிட்ட பொருள் சந்தையில் தேவைக்கும் அதிகமாக வந்தால் விலை குறையும். அதே நேரத்தில் அந்தக் குறிப்பிட்ட பொருள் தேவைக்கும் குறைவாக வந்தால் விலை அதிகரிக்கும்.

சந்தையில் அதிக விலைக்கு விற்கும் பொருள் உயர்ந்த தொழில் நுட்பம் கடினஉழைப்பு எந்திரசாதனங்களை கையாளுதல் காரணமாக உற்பத்தி அதிகரிக்கும். இவ்வுற்பத்தியானது சமுதாயத்தில் தேவையின் விகிதத்தை விட கூடுதலாகும் பட்சத்தில் விலை இயல்பாகவே குறைந்துவிடும்.

இந்தக் கண்ணோட்டத்தின்படி ரஷ்யாவில் நமது ஆளுமைக்கு உட்பட்ட முறையில் விவசாயப் பண்டங்கள் உற்பத்திக்கு கவனம் கொடுத்திருக்க வேண்டும். கூட்டுப் பண்ணைகள் ஒரு வருடத்தில் உற்பத்தி செய்த பொருளிலிருந்து அனைத்து செலவினங்களிலிருந்து மிஞ்சும் (விவசாயிகள் கூலி, விதைநெல், உரம், கலப்பை தேய்மானம் போன்ற...) உபரியில் மட்டுமே உற்பத்தி அளவை கூட்ட முடியும்; இதற்கு தொழில்நுட்பம் மற்றும் இத்தியாதி... இத்தியாதி... விசயங்களில் முதலீடு செய்ய முடியும் என்பது தெளிவு.

ஆனால் விவசாய உற்பத்திப் பொருள்கள் விலை தீர்மானிப்பது போன்றவை நடைமுறைக்கு ஒவ்வாததாக இருந்தது. ஆகவே கூட்டுப் பண்ணைகள் விவசாயிகளுக்கு ஊதியம் தருவதில் கொடுத்த அக்கறை உற்பத்தி மேம்பாட்டிற்கு கொடுக்க இயலாமல் போனது. எனவே காலப்போக்கில் தனது ஊழியர்களுக்கு கூட ஊதியம் அளிக்க முடியாத நிலைக்கு கூட்டுப்பண்ணைகள் தள்ளப்பட்டன. கூட்டுப்பண்ணைகள் அரசின் உதவியை எதிர்பார்க்க அத்தலைப்பட்டன; வங்கிக் கடனை கொண்டு சரிசெய்ய திட்டமிடப்பட்டது. ஆனால் நிலைமை கை மீறிப்போனது. மேலும் விவசாயிகள் கூடுதலான உழைப்பைச் செலுத்தி விட்டு அதன் பலனை அடையாதவர்களாகினர். இது அரசே குறிப்பாக விவசாயி வர்க்கத்தினரை அளவுக்கு அதிகமாக சுரண்டுவதாக மாறியது. இது சமுதாயத்தில் உழைப்போர் பலராகவும், அதன்பலனை அனுபவிப்போர் சிறுபான்மையினராகவும் தோன்ற வழிவிட்டது. சமுதாய நடைமுறையில் விவசாயம் சார்ந்த பணிசெய்வோர் கீழானவர்களாக நடத்துவதும் தோன்றியது.

இரண்டாம் உலகப்போர் ரஷ்யாவை மேலும் சிக்கலாக்கியது. பாதுகாப்பு கருதி உற்பத்தி செய்யப்பட்ட ராணுவ தளவாடங்கள் அரசு சமூக பொருளாதார நெருக்கடியை தீர்க்க பின்னாளில் உலகநாடுகள் மத்தியில் ஆயுத வியாபாரியாக விற்பதும் நடைமுறையில் வந்தது. இது படிப்படியாக அனைத்து உற்பத்திதுறைக்கும் என நடைமுறையாகியது. பலவகையான பொருட்கள் உலகில் விற்பதற்காகவே - லாபத்துக்காவே உற்பத்தி செய்வதாகிறது.

இதற்கு ஏகபோக முதலாளித்துவ நாடுகள் தான் காரணம் என்று

படிப்பகம்

www.padippakam.com



சொல்வோரும் உண்டு. இதில் எமக்கும் உடன்பாடே அதே நேரத்தில் புறநிலைமைகளையே காரணம் காட்டி நமது திட்டமிடுதலை சரியென நியாயப்படுத்துவது சரியல்ல. ஏனென்றால் நமது புறநிலைமைகளையும் மீறி செயல்படும் வகையில் (வெற்றி கொள்ளும் வகையில்) அரசு நிலையை வளர்ப்பது நம்மையே பொறுத்தது என்பதை மறுப்பதாகிவிடும். தவறு களையப்படாமல் மேலும் தவறே செய்வதாகிவிடும்.

யுத்தத்துக்குப் பின்னரான ஆண்டுகளில் சமூக பொருளாதார பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை. நிலைமை மோசமாகிக் கொண்டே வந்தது. குறிப்பாக நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்குமான முரண்பாடு அதிகமாகியது. மூலதனத்துக்கும் உழைப்புக்குமான முரண்பாடாகவும் வளர்ச்சி பெற்றது.

ருஷ்ய சமுதாயத்தில் புதிய வகைப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் தோன்ற காரணம் கட்சியின் திட்டமிடுதலே என்றனர். அதிலும் குறிப்பாக தோழர் ஸ்டாலின் முன்வைத்த கூட்டுப் பண்ணைமயமாக்க நடைமுறையே என்பர். இதனாலேயே ருஷியாவில் ஸ்டாலினுக்கு பின் வந்த தலைமையினர் ஸ்டாலின் மீது அனைத்துக்கும் பொறுப்பாக்குவதும் தொடர்ந்தது. இதில் எமக்கும் கூட உடன்பாடே. ஆனால் இதற்கு தோழர் ஸ்டாலினை மட்டுமே பொறுப்பாக்க முடியாது. மாறாக அன்றைய சமுதாய நிலைமைகளையே காரணமாக கொள்ளமுடியும். ஏனென்றால் எந்த ஒரு தனி மனிதனின் நடைமுறையும் சூழலின் விளைபொருளாகும். தோழர் ஸ்டாலினுக்கு மாற்றாக வேறொருவர் இருந்தாலும் (நானே அன்று பொறுப்பில் இருந்தாலும்) கூட பெரும்பான்மையாக தவறு நடந்திருக்காது எனக்கூற இயலாது. எப்படியிருப்பினும் இது மாதிரியான தவறுகள் வர்க்கங்களற்ற சமுதாயம் அமைப்பதற்கான முயற்சியின் தீவிர ஆர்வத்தின் வெளிப்பாடுதான் என புரிந்து கொள்ள முடியும். இன்று அது அரிய படிப்பினைகளை வழங்கி உள்ளது.

மேலும் தோழர் ஸ்டாலின், அகிலத்தில் கூறும் போது ருஷ்யாவில் வர்க்கங்களே இல்லை என்றார். பின்னாளில் அவரே தமது கருத்து தவறு என்று ஒத்துக் கொள்ள நேர்ந்தது. இது முரண்பட்ட கண்ணோட்டம் இது குறித்து மாவோ ஸ்டாலினிடம் நேரடியாக விமர்சனம் செய்கிறபோது எழுதுகிறார். "தமது தவறான கருத்தை ஸ்டாலின் தயக்கத்தோடு ஒத்துக் கொண்டார்" என்கிறார்.

வர்க்கங்களற்ற சமுதாயம் படைப்பதற்கான முயற்சியில் பாட்டாளி - விவசாயி வர்க்க சர்வாதிகாரம் இறுதியாக, பாட்டாளி, விவசாயி வர்க்கத்தின் மீதான சர்வாதிகாரமாகிப்போனது. சமுதாயத்தில் வர்க்கப்பகைமைகள் வளர்ச்சி அடைந்தன. ஆளும் வர்க்கமாக கட்சி மற்றும் அரசில் பணியாற்றும் அதிகாரிகளே ஒழுங்கமைத்தனர்; இவர்கள் மட்டுமே வசதியாக வாழ முடிந்தது. இவ்வதிகார வர்க்கம் சமுதாயத்திற்கு தேவைப்பட்ட அனைத்துப் பணிகளையும் எந்திரகதியில் பார்த்தது. தீர்க்க முனைந்தது. இத்தகைய கண்ணோட்டம் தோழர் ஸ்டாலின் இறப்புக்குப் பின் தோன்றவில்லை. மாறாக அவர்காலத்திலேயே விதை ஊன்றப்பட்டதாக இருந்தது. தோழர் ஸ்டாலின்

படிப்பகம்

www.padippakam.com



இறப்புக்குப் பின் இது கூடுதல் ஊக்கம் பெற்றது. அதிகாரவர்க்கம் தமது ஆளுமையை நிறுவியது.

எந்த வர்க்கம் ஆட்சியில் இருக்கிறதோ அவ்வர்க்கமே தனது நலனுக்கான சுதந்திரத்தை, உரிமையை எல்லோருக்குமான உரிமை, சுதந்திரமாக சித்தரித்தது. தனது வர்க்க நலனுக்கான கொள்கையே, சமாதானம், சகவாழ்வு என்று முன்வைத்தது. செயல்படுத்தியது. இது வெவ்வேறுபட்ட சமூக அமைப்பு கொண்ட நாடுகளிடையே உறவு சுரண்டல் தன்மை கொண்டதாகிறது. இதுவே பின்னாளில் உதவி என்ற பெயரில் மூன்றாம் உலகை சுரண்டுவதாகவும், ஆளுமை செய்வதற்கு அடித்தளமாக மாறியது.

இத்தகைய போக்குகள் தோன்ற தனிநபர்களை குறிப்பாக குருச்சேவ் மீது அளவுக்கு அதிகமாக குற்றம் சாட்ட முடியாது; மாறாக சமுதாய வாழ்வின் அந்தக் குறிப்பிட்டக்கட்டத்தின் தேவையை சிலதனிநபர்கள். சாராம்சமாக வெளிப்படுத்துகிறார்கள். சமுதாயப் பெருந்திரளினரும் தவிர்க்க இயலாத சூழலில் தலைமையை ஏற்றுக் கொள்வதாகி விடுகிறது.

சமுதாயத்தில் நாம் திட்டமிட்ட தேவைக்கான உற்பத்தி முயற்சி பின்தள்ளப்பட்டது. நமது நோக்கத்தையும் – நடைமுறையையும் மீறி சந்தைப் பொருளாதாரம் உற்பத்தி வளர்ச்சி பெற்றது. தனிச்சொத்துடமையை அழித்த நாம், விரும்பவில்லையெனினும் சமுதாயத்தில் தனிச்சொத்துடமை படிப்படியாக வளர்ச்சி பெற ஏதுவாகிற்று.

இதற்கு குடும்ப தொடர்பான விசயங்களில் நமது கவனத்தை குவிக்கத்தவறியதும் கூட காரணமாகியது. சமுதாயத்தில் தனிச்சொத்து வடிவம் ஒழிக்கப்பட்டது. ஆனால் பெற்றோர்கள் குழந்தைகளுக்கு கல்வி, வேலை வாய்ப்பு போன்றவற்றை உருவாக்கித்தருவது ஒரு விதத்தில் பார்த்தால் தனிச்சொத்துடமை அடிப்படையான சிந்தனை - நடைமுறையின் வெளிப்பாடாகும். கட்சியிலும், அரசியலிலும் செல்வாக்குப் பெற்றவர்கள் மட்டுமே தமது குழந்தைகளை நன்கு படிக்கவைக்க முடிந்தது. நல்ல வேலைகளை தேடிக் கொள்ள முடிந்தது. இதன் பின்விளைவாக ஒருவிதத்தில் பார்த்தால் குழந்தைகள் பெற்றோர்கள் அரவணைப்பில் வளர்வதும் பின்னாளில் குழந்தைகளின் அரவணைப்பில் பெற்றோர்கள் வாழ்வதும் ஆகிறது. இது கணவன் மனைவி உறவில் கூட பிரதிபலித்தது. அதுவே பெண்கள் மீதான ஆணாதிக்கமாக குடும்ப அமைப்பு வெளிப்பட்டது. இது மற்றைய முதலாளித்துவ நாடுகளில் உள்ளதைப் போன்ற குடும்ப அமைப்பாக சாரத்தில் செயல்படுவதாயிற்று.

தனிச்சொத்துடைமை வளர்ச்சியானதும் **(3)** குடும்பம் என்ற நிறுவனம் இறுக்கமடைந்தது. இதன் பின்விளைவாக தனிச்சொத்துடமை அடிப்படையிலான சமுதாயத்தில் வாழ்வதற்கான முயற்சி என்றபடியான கடைசித் தொழிலாக பெண்கள் விபச்சாரம் செய்வதும் அதிகமாயிற்று. இன்றைய நடைமுறையில் ஒரு பெண் ஒருகுவளை தேநீருக்காக, அல்லது ஒருவேளை உணவுக்காக எந்த ஆடவனுடனும் இரவை கழிப்பதற்கு தயார் என்ற நிலை தோன்றி உள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



இவ்வாறு சமுதாய வாழ்வில் பல்வேறு வழியில் தனிவுடமைச் சிந்தனை தலைதூக்கியது. அரசுத்துறை பொதுத்துறை நிறுவனங்கள் லாபமின்றி நடப்பதாகியது. இந்நிறுவனங்கள் லாபநோக்கில் செயல்படும் வகையில் குத்தகை அடிப்படையில் வேலைப்பணிகள் ஒதுக்கப்பட்டது. இது சமுதாயம் முழுமைக்கும் தொழிற்சாலை மற்றும் கூட்டுப் பண்ணைகளிலும் நடைமுறையாயின. கிராமப்புறங்களில் கால்நடை வளர்ப்பு, காய்கறி பயிரிடுதலுக்காக ஒன்றாகியது. இப்போக்கு வளர்ச்சி பெற்று எண்ணற்ற சிறுஉடைமையாளர்கள் தோற்றத்திற்கு காரணமாகியது. அதுவே வளர்ச்சி பெற்று 1985-களில் அதிகார வர்க்கத்தையும் பின்னுக்கு தள்ளிவிட்டு சிறுஉடைமையாளர் பிரதிநிதிகள் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுவதாகியது. அதுவே 'கிளாஸ்நாஸ்ட்' - தனிவுடமைக்கு சுதந்திரம் - எனும் விதத்தில் செயலுக்கு வந்தது. ஆளுமை பெற்றது.

இந்தச் சிறுஉடைமையாளர் வாழ்வும் வளர்ச்சியும்கூட சமுதாயத்தில் ஏற்கனவே உள்ள பொதுத்துறை, அரசுத்துறை நிறுவனங்களை சிதைப்பதில் தான் உள்ளது. எனவே தான் அவர்கள் கூட்டுப் பண்ணை போன்றவற்றுக்கு மானியம் போன்றவை கூடாது. அது லாபத்தில் இயங்கினால் மட்டுமே இயங்கலாம் என்று வலியுறுத்துவதும் தொடர்கிறது.

ருஷ்யா போன்ற நாடுகளில் தனியார்மயமாக்குதலுக்கு உள்நாட்டிலும் கூட வர்க்கப் பின்னணியுடன் ஆதரவு உருவாகியது. இதற்கு சர்வதேச பன்னாட்டு நிறுவனங்களும் கூட ஊக்குவிக்கிறது. இதன் பின்விளைவாக பன்னாட்டு முதலாளிகளோடு ருஷ்யாவின் வர்க்கச் சக்திகள் இணைந்த கூட்டு நிறுவனங்களும் தற்போது தோன்றி உள்ளது. அதுமேலும் வளர்ச்சிபெறும் என்ற நிலை உள்ளது.

(அ) சீனப்புரட்சி மாவோவின் தலைமையில் நடைபெற்றது. ஒருவிதத்தில் ரஷ்யப்புரட்சியின் வழிகாட்டுதலின் தொடர்ச்சியாக நடைபெற்றது எனலாம். இது புரட்சிக்கு பிந்தைய கட்டத்திலும் தொடர்ந்தது. குறிப்பாக சோசலிச கட்டுமான நடைமுறைகள் ரஷ்யா பாணியிலேயே சீனாவின் முதல் ஐந்து ஆண்டுத் திட்டங்கள் அமைந்தது. நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதே நேரத்தில் ரஷ்யாவின் பின்னடைவு குறித்த சர்ச்சைகள் எழுந்தன. வாதப்பிரதிவாதங்கள் உக்கிரமடைந்தன. இதன் பின்விளைவாக தோழர் மாவோ புதிய முடிவுகளுக்கு வருகிறார். இதை மாவோவின் பத்துபெரும் உறவுகள் குறித்த உரை வெளிப்படுத்துவதாக அமைந்தது. இதன் தொடர்ச்சியாகவே மாவோவின் 'ரசியப் பொருளாதாரம் பற்றிய விமர்சனம்' 'மாபெரும் விவாதம்' என்ற நூல்கள் எழுதினார். அதில் ரசியாவின் பின்னடைவுக்கு ஊற்று மூலம் எது? என்றும் ரசியாவில் ஏற்பட்ட பின்னடைவுக்கு பொறுப்பாக்கும் ஸ்டாலின் பாத்திரம் பற்றிய விமர்சனங்களும் இருந்தன.

இந்தப் போக்கு சீனக்கட்சியில் கருத்து வேற்றுமைக்கு அடிப்படையாகியது. கட்சியில் ரஷ்ய பாணியிலான சோசலிசக் கட்டுமானம் முன்வைத்தவர்களின் கரமே ஓங்கி இருந்தது. பெரும்பான்மையினராக

படிப்பகம்

www.padippakam.com



இருந்தனர். மாவோ சிறுபான்மை ஆனார். மாவோவும் பெரும்பான்மையினர் நடைமுறைக்கு கட்டுப்படுவதாக இருந்தாலும், அவரது கலாச்சாரப்புரட்சி, குடும்பத்திற்கு மாற்றாக கம்யூன் வாழ்க்கை முறையை கொண்டுவர முயற்சி தொடர்ந்தது. மாவோவே தலைமை வகித்தார் என்பதாலும், அபரிமிதமான மக்கள் செல்வாக்காலும் தமது இந்த முயற்சிகளுக்கு வழியாகவும், கட்சிக் காங்கிரஸ் கூட்டப் பெறாமல் தள்ளிப்போடுவதில் வெற்றி பெற்றார். இது மாவோவின் இறப்பு வரை தொடர்ந்தது. பின்னர் வந்த தலைமுறையினர் படிப்படியாக மாவோ முன் வைத்ததற்கு எதிரான ரஷ்ய பாணி நடைமுறையே செயலுக்கு கொண்டுவருவதில் வெற்றி பெற்றனர்.

எனவே ரஷ்யாவைப் போன்றே சீனாவில் பின்னடைவும் தொடர்ந்தது; தொடர்கிறது. இதன் பின்விளைவாக அதிகார வர்க்கமும் ஏன் சிறுஉடைமையாளர்களும் தோன்றி உள்ளனர். இந்த வளர்ச்சிப் போக்கிற்கு ரஷ்யாவை விட சீனாவிற்கு குறைவான கால அவகாசமே பிடித்தது என்று கருத வேண்டி உள்ளது. ஒரு புள்ளிவிபரப்படி சீனாவின் மக்கள் தொகையில் 5சதவீதம் சிறுபணக்காரர்கள் (5000 யென் சம்பாதிப்போர்) தோன்றி உள்ளனர்.

எனவே ரஷ்யாவைத் தொடர்ந்து சீனாவிலும், தேவைக்கான உற்பத்தி மறைந்தது; சந்தைக்கான உற்பத்தியே வளர்ச்சி பெற்றது; வளர்ச்சி பெற்றும் வருகிறது.

இதன் பின்விளைவாக அரசுத்துறை, பொதுத்துறை நிறுவனங்கள் நஷ்டமடையும் நிறுவனங்கள் தனியார்மயப்படுத்தப் படுகிறது. உள்நாட்டு ஆளும் வர்க்கப் பிரிவுகளுடன் பன்னாட்டு முதலாளிகள் சேர்ந்த கூட்டு நிறுவனங்களும் தோன்றி உள்ளன.

## 2. வளர்முக நாடுகளில் பொதுத்துறை நிறுவனங்கள் வளர்ச்சியும் விழ்ச்சியும்

இந்தியா போன்ற நாடுகளில் 1950-களுக்கு பின்னர் அரசுத்துறை பொதுத்துறை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. இந்நிறுவனங்கள் தோற்றத்திற்கு பல்வேறு காரணங்கள் இருந்தன.

பொதுவாகவே இந்நாடுகள் முன்னாள் காலனி நாடுகளாகும். அந்நாடுகளில் எழுச்சி பெற்று வந்த தேச விடுதலைப் போராட்டம் ஒருபுறம். ஒட்டு மொத்தமாகவே உலகெங்கும் ஒட்டு மொத்த சுரண்டல் சமுதாய அமைப்பிற்கு மாற்றாக நடந்த ரஷ்ய சீனப்புரட்சியின் தாக்கம் மற்றொரு புறம். இதனால் ஏகபோக முதலாளித்துவ நாடுகள் காலனிகளை தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்துக் கொள்ள இயலவில்லை. தங்களது ஆளுமையை ஏற்றுக் கொண்ட விதத்தில் (தங்களது உடமைக்கும், உரிமைக்கும் உத்தரவாதமான முறையில்) சுதந்திரமளிக்க முன் வந்தன. இல்லையெனில் ஒட்டுமொத்தமாகவே அவை சிவப்பு பதாகையின் கீழ் செல்வதை தடுக்க இயலாது என்று புரிந்தும் இருந்தனர். எனவே தான் காலனி நாடுகளுக்கு

படிப்பகம்

www.padippakam.com



சுதந்திரம் அளித்தனர். இதன் பின் விளைவாக தத்தமது நாடுகள் தங்களது பொருளாதார வளர்ச்சிக்கு பல்வேறு நடைமுறைகளை கைக்கொள்ள நேர்ந்தது. அந்த வகையில் தோற்றுவிக்கப்பட்டது தான், அரசுத்துறை பொதுத்துறை நிறுவனங்களாகும்.

இந்த அரசுத் துறை, பொதுத்துறை நிறுவனங்கள் உருவாவது - தங்களது சந்தைக்கான உத்தரவாதமில்லாத சூழல் எழுந்தாலும் - சிவப்பு பதாகையின் கீழ் (சமுதாய மாற்றத்தை புரட்சியை தடுப்பதாக) வளர்முக நாடுகள் செல்லாமல் தடுக்கின்ற நடவடிக்கையாகவே ஏகபோக முதலாளித்துவ நாடுகள் கண்டனர். ஏனென்றால் ரஷ்யா, பொதுவுடமைவாதிகள் தலைமை தாங்கிய போதிலும் சந்தைப் பொருளாதார அமைப்பை நோக்கியே சென்று கொண்டுள்ளது என புரிந்து கொண்டதும் ஆகும்.

மேலும் ஏகபோக முதலாளித்துவ நாடுகள் போரின்போதான இழப்பை சரிக்கட்டுவதிலே தான் கண்ணும் கருத்துமாக இருந்தனர். தங்களது மேலாண்மையை தக்கவைத்துக் கொள்வதே பெரிய விசயமானது இது காலனி நாடுகளை கையாள்வதிலும் பிரதிபலித்தது. குறிப்பாக பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மன், ஜப்பான் போன்றவையின் நடவடிக்கைகள் இருந்தது. அதே நேரத்தில் ரஷ்யாவும், அமெரிக்காவும் உலக ஆளுமைக்கான போராட்டத்தில் குதித்தன. மேலும் வளர்முக நாடுகளில் பொருளாதார வளர்ச்சி குறித்த விசயங்களில் கவனம் செலுத்த முடியாமல் போனது. பிரம்மாண்டமான அரசுத்துறை பொதுத்துறை நிறுவனங்களைப் போல ஏகபோக முதலாளித்துவ நாட்டு தனிப்பட்ட முதலாளியாலும் ஏன் ஒரு ஏகபோக முதலாளித்துவ நாடே கூட பிரம்மாண்ட தொழிற்சாலைகளை நிறுவ நிதி ஆதாரத்தைக் அன்று கொண்டிருக்கவில்லை அல்லது மிகக்கடினமான ஒன்று. எனவே தான் அரசுத்துறை பொதுத்துறை நிறுவனங்களை முன்னாள் காலனி நாடுகளில் உருவாக்குவதற்கு உடன்பட்டனர். இருந்தபோதிலும் தங்களுக்கு எதிரான நிலைமைகளை அந்நிறுவனங்கள் தோற்றுவிக்குமே என்ற அச்ச மனோபாவம் ஏகபோக முதலாளித்துவ நாடுகளுக்கு இருக்கவே செய்தன. ஆனபோதிலும் தவிர்க்க இயலாத புறநிலை விதியாக கருதி ஏற்றுக் கொள்ள நேர்ந்தது.

இது மாதிரியான பிரம்மாண்ட நிறுவனங்களுக்கு தொழில்நுட்பம் மற்றும் இதர உதவிகளை ஏகபோக முதலாளித்துவ நாடுகளை விட உலகில் ரஷ்யா அளிக்க முன்வந்தது. ரஷ்யாவின் இந்த உதவிக்கு உள்நோக்கம் இல்லாமல் இல்லை. அதாவது உலக மேலாண்மையில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள இது உதவியது. மேலும் தனது நாட்டில் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண ஓரளவுக்கு தணிக்கும் விதமாக செய்ய வழிபிறந்தது என கருதும் நிலை ருஷ்யாவுக்கு வந்தது.

வளர்முக நாடுகளில் அரசுத்துறை பொதுத்துறை நிறுவனங்கள் உருவாக்கம் ருஷ்யாவைப் போல, சீனாவைப் போல வர்க்கங்களை ஒழிக்கும் நோக்கத்தை உதட்டளவில் கூட கொண்டதாக இல்லை. மாறாக சமுதாயத்தில் (முதலாளித்துவ உற்பத்தி) பொருளாதார வளர்ச்சி (சுய பொருளாதார வளர்ச்சி

படிப்பகம்

www.padippakam.com



என இங்கு நாம் சொல்லக் கூடும்) மட்டுப்படுத்தப்பட்ட சூழலில் இத்தகைய நிறுவனங்கள் உருவாவது தவிர்க்க இயலாத வரலாற்று விதியாகும். இந்நிறுவனங்கள் வளர்ச்சி செயல்பாடே பின்னாளில் வங்கிகளின் தேசீய மயமாகத்திற்கு ஊக்கமானது. ஏன் மாநில அரசுகளே கூட அரசு போக்குவரத்துக் கழகம் போன்றவையும் ஏற்பட அடித்தளமானது.

ரஷ்யா, சீனாவில் பொதுத்துறை நிறுவனங்கள் தோற்றம் அதுவும் பொதுவுடமைவாதிகள் தலைமையில் உருவாக்கப்பட்டது. பின்னடைவு சந்தித்ததை காண்கிறோம் என்றால் வளர்முக நாடுகளில் பொதுத்துறை நிறுவனங்கள் செயல்பாடு சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ரஷ்யா சீனாவைப் போன்று ஒருபுறம் அதிகார வர்க்கத்தையும் மறுபுறம் தனிப்பட்ட முதலாளிகளின் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளியை விட கூடுதலான வசதிபடைத்த பிரபுக்குல பாட்டாளிகளை **(4)** உருவாக்குவதாக உள்ளது. பெரும்பாலான தொழிற்சாலைகள் நஷ்டத்திலேயே இயங்குவதாயிற்று. அரசின் நிர்வாகச் சீர்கேடுகள் மற்றும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள் பயன்தரவில்லை. மென்மேலும் நஷ்டத்தில் இயங்குவது தவிர்க்க இயலாமல் போனது. அந்நிறுவனங்கள் செயல்படுவது பலவகையில் சமுதாயத்திற்கு நன்மை அளிக்கிறது என்றாலும் லாப அடிப்படையில் இயங்கினால் மட்டுமே இயக்க முடியும். நஷ்மடையும் நிறுவனங்களை தனியாருக்கு விடுவதைத்தவிர வேறுவழியில்லை என்றாயிற்று.

இத்தகைய நிறுவனங்களில் வேலை பார்க்கும் தொழிலாளிகள் தான் அதை பெரும்பாலும் எதிர்க்கின்றனர். போராடுகின்றனர். மற்றைய மக்கள் திரளினரிடம் இந்நிறுவனங்களில் பணிசெய்வோர் சரியாக வேலை செய்வதில்லை. எந்தச் செயலையும் பொறுப்பின்றி செய்கின்றனர். எனவே இவர்கள் தனியாரிடம் பணிசெய்தால் தான் ஒழுங்காக இருப்பர் என்ற மனநிலையில் இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. எதிர்ப்பு குறித்து குறிப்பாகச் சொன்னால் எல்.ஐ.சி. ஊழியர் போராட்டத்தை சொல்லலாம். அவர்களது எதிர்ப்பையும் மீறி தனியார் - வெளிநாட்டு நிறுவனங்கள் காப்பீட்டுத் துறையில் நுழையும் வகையில் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதும் காணத்தக்கது.

## 3. ரஷ்யா பின்னடைவும் புதிய அரசியல் போக்குகளும்

ரஷ்யாவில் பொதுவுடமைவாதிகளின் இலட்சிய பயணத்தில் ஏற்பட்ட பின்னடைவும், அது குறித்த மாவோவின் கருத்துக்களையும் ஏற்கனவே கண்டோம். மாவோ சீனக்கட்சியில் ஏற்படுத்திய தாக்கம் உலகெங்கும் பிரதிபலித்தது. உலகையே ரஷ்யப் பாதை ஆதரவாளர்கள், மாவோ ஆதரவாளர்கள் என இரண்டுபடுத்தியது. எனவே ஒவ்வொரு நாட்டிலும் இடதுசாரி இயக்கம் உடனடியாகவோ சிறிது காலம் தாழ்த்தியோ பிளவை சந்தித்தது. அது இந்தியாவிலும் நடந்த ஒன்று தான்.

படிப்பகம்

www.padippakam.com



குறிப்பாக ரஷ்யாவில் சோவியத்யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி பிளவுபட்டது. புதிதாக 1965-களில் ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி போல்ஷிவிக் உருவானது. இது போல் உலகெங்கும் சான்று காட்டமுடியும். இந்தியாவில், இந்திய பொதுவுடமை இயக்கம் மாவோவின் பாதையே சரி என்போரும் பிளவை நோக்கி சென்று கொண்டிருந்தனர். அதே வேளையில் ரஷ்யப்பாதையை ஆதரித்தவர்கள் (சோசலிசக் கட்டுமானம்) இந்தியச் சூழலில் ரஷ்யாவின் உதவியோடு பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்குவதை ஆதரிப்பதில் முடிந்தது. இதுவே காலப்போக்கில் உலக நிலைமை மாறிவிட்டது. அமைதி வழியிலே புரட்சியை சாதிக்கலாம் என்ற கருத்துக் கண்ணோட்டம் வலுப்பெற்றது. இதன் பிரதிநிதியாக இந்தியப் பொதுவுடமை இயக்கம் தொடர்ந்தது. இது தவறானது. அறிவுக்குப் பொருத்தமற்றது. உலக நிலைமைகளை கணக்கில் கொள்ளாதது. மாவோ வழியே சரியானது எனும் நிலைக்கு பலர் தள்ளப்பட்டனர். இதன் பின்விளைவுவாக. மாவோ வழியை முன்வைத்தவர்கள் பின்னாளில் இந்தியப் பொதுவுடமை இயக்கம் மார்க்சிஸ்ட் ஆயினர். சீனாவில் கூட மாவோ எதிர்ப்பாளர்களே அதாவது ரஷ்யப்பாதையை ஆதரித்தவர்களே செல்வாக்குப் பெற்றனர். மாவோவின் பாதை நடைமுறைக்கு வருவதில் பின்தள்ளப்பட்டது. இதுவும் உலக அளவில் பிரதிபலித்தது. அதாவது மாவோ வழியை முன்நிறுத்திய இந்திய மார்க்சிஸ்ட் இயக்கம் ரஷ்யப் பாதையை முன்வைத்த சீனாவின் மாவோ எதிர்ப்பாளர் பாதையே தமது பாதை என்றனர். அக்கட்சியில் கலாச்சாரப்புரட்சி எதிர்ப்பது அல்லது ஆதரிப்பது என்றபடி குழப்பங்கள் தொடர்ந்தது. சி.பி.ஐ. (எம்.எல்.) உருவாகும் வரை.

இத்தகைய சூழ்லில் இந்திய உழவர்களின் எழுச்சி மேற்கு வங்கத்தில் நடந்தது. அதையொட்டி சாருமஜீம்தார் தலைமையில் புதிய அணி தோன்றியது. அதுவே இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (எம்.எல்) ஆனது. அவர்கள் மார்வோவின் பாதையை ஆதரித்தனர். ரஷ்யாவின் பாதை முதலாளித்துவ மீட்சியை கொண்டுவரும். ரஷ்யா ஒரு சோசலிச நாடாக இல்லை. சமூக ஏகாதிபத்திய நாடாக மாறிவிட்டது. வர்க்கப் போராட்டத்தை கைவிட்ட வர்க்க சமரச பாதையை முன்வைக்கிறது எனவும் கருதினர்.

இந்திய தொழிலாளி வர்க்கம் புரட்சிகரமற்றதாக உள்ளது. எனவே தொழிற்சங்கம் கட்டுவது திரிபுவாதத்திற்கே வழி வகுக்கும். இதற்கு சி.பி.ஐ. சி.பி.ஐ. (எம்) சரியான உதாரணம். கிராமப்புறத்தில் பணி செய்வதே சரி என்றாயிற்று. சி.பி.ஐ. (எம்.எல்.) பிரிவினர்க்கு.

வர்க்கங்கள் நாடுதழுவியது, தேசந்தழுவியது மட்டுமல்ல; உலகந்தழுவியது. இதற்கு சான்றாகவே புரட்சிக்கு பிந்தைய நாடுகளிலும் சரி, வளர்முக நாடுகளிலும் சரி, பொதுத்துறை நிறுவனங்கள் தோற்றத்தோடு அதிகார வர்க்கத்தையும், பிரபுக்குல பாட்டாளி வர்க்கத்தையும் தோற்றுவித்தது. (இந்த அதிகார வர்க்கத்தையே சி.பி.ஐ. (எம்.எல்.) பிரிவினர் அதிகார வர்க்க தரகு முதலாளித்துவம் என்றனர்) இதன் பிரதிபலிப்பாக குறிப்பாக பிரபுக்குல பாட்டாளி வர்க்க நலனை முன்னிறுத்தி புரட்சியை, வர்க்கப் போராட்டத்தை

படிப்பகம்

www.padippakam.com



கைவிட்ட இயக்கமே சி.பி.ஐ., சி.பி.ஐ. (எம்.) ஆகும். அதற்கு எதிரிடையான இயக்கம் சி.பி.ஐ. (எம்.எல்) என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று உலகமயமாக்கலின் ஓர் அங்கமான தனியார்மயமாக்கல் கொள்கையை கடைப்பிடிக்கும் நிலைக்கு இந்திய அரசும், ஆளும் வர்க்கமும் ஆளாகி உள்ளது. இது தாங்கள் உருவாக்கிய பொதுத்துறை நிறுவனங்களை தாங்களே அழிப்பதாகவும் மாறிவிட்டது. இந்த மாற்றத்தை சி.பி.ஐ., சி.பி.ஐ. (எம்.) பிரிவினர் எதிர்க்கின்றனர். சி.பி.ஐ. (எம்.எல்) குழுக்களும் கூட எதிர்ப்பதாக இன்று உள்ளது. சி.பி.ஐ, சி.பி.ஐ. (எம்)க்கு எதிரிடையான கண்ணோட்டத்தை உடையவர்கள் இது விசயத்தில் ஒரே கண்ணோட்டம் உடையதாக மாறிவிட்டனர்.

ஒருகாலத்தில் அவர்கள் முன்வைத்த எதிர்ப்பை சுயவிமர்சனத்தோடு அணுகுவதாக இல்லை; அரசுத்துறை பொதுத்துறை நிறுவனங்கள் உருவாக்குவது ஒன்றும் சோசலிசம் - அமைதிவழியில் - வருவதற்கு வழி வகுக்காது; ஏனென்றால் சமுதாயத்தில் தனிச்சொத்துடமையோடு அரசுடைமை (அரசு முதலாளித்துவம்) வந்துள்ளது. இந்த அரசுடைமையும் ஆளும் வர்க்கத்திற்கு சேவை செய்வதாக மாறும்; ஆளும் வர்க்கத்திற்கு அடங்கிய அதிகார வர்க்கமாகிறது. சுருக்கமாகச் சொன்னால், சொத்தின் உடைமை வடிவத்தை மாற்றுவதால் தனியாரிடமிருந்து - அரசுடைமைக்கு (அரசு முதலாளித்துவம்) மாற்றுவதால் சோசலிசம் வந்து விடாது என்றனர்.

அரசு முதலாளித்துவம் இன்று தனியாருக்கு மாற்றக்கூடாது எனும் நிலையை எடுக்கின்றனர். முன்னர் காலத்தில் எடுத்த முடிவிற்கு மாற்றாக எடுப்பது ஒருவிதத்தால் அரசு முதலாளித்துவம் முற்போக்கானது சாராம்சத்தில் என்ற சி.பி.ஐ. சி.பி.ஐ.எம். நிலைப்பாடாகவே, சரியென்பதாகவே முடிந்து விடுகிறது. இது அரசு முதலாளித்துவம் சோசலிச சமுதாயம் அமைப்பதற்கான கரு என கருதுவதும் ஆகிறது. மேலும் உடைமை வடிவம் மாறுவது தனியாரிடமிருந்து - அரசுக்கு மாறுவது மூலம் சோசலிசம் வந்து விடாது என்ற கண்ணோட்டம் அரசு முதலாளித்துவத்தை பாதுகாப்பது மூலமே முடியும் என்ற கண்ணோட்டமாக மாறுகிறது.

ரஷ்ய, சீனாப்புரட்சியில் ஏற்பட்ட பின்னடைவுகளை நாங்கள் கணக்கில் கொள்கிறோம். அதைவிட உயர்ந்த கட்டத்தில் புரட்சிக்கு பின்னர் சமுதாயத்தை மாற்றி அமைப்போம்! என்ற கண்ணோட்டம் புரட்சிக்கு முந்தைய எதார்த்த சமுதாயத்தில் அரசு முதலாளித்துவத்தை எப்படி கையாள்வது குறித்து எந்தவித திட்டமீ இல்லாது சமுதாய நடைமுறை ஏற்பதாகிறது. இது சி.பி.ஐ. சி.பி.ஐ.எம்-க்கும் சரி, சி.பி.ஐ.எம்.எல் பிரிவுக்கும் சரி எந்தவித கருத்துவேறுபாடு இல்லாததாகிறது. அமைப்பு ரீதியான வேறுபாடாகவே இருந்துவிடுகிறது.

இது சமுதாயத்தில் புரட்சியாளன் என்பவன் எதார்த்தத்தில் நிலவும், அரசியல், பொருளாதாரம் உடைமை, வடிவம், உரிமை, பண்பாடு போன்ற இத்தியாதி... விசயங்களில் மாற்றம் கொண்டுவருகிறான். புதிய ஆளும் வர்க்கமாக ஒழுங்கமைக்க விரும்புகிறான் என்றாகும். இதற்கு மாறாக

படிப்பகம்

www.padippakam.com



மேற்கூறப்பட்ட விசயங்களில் மாற்றங்களை நிராகரிப்பவன் ஆளும் வர்க்க நிலையை எடுக்கிறான். சமுதாய மாற்றத்தை தடுக்கிறான் என்பதும் ஆகும்.

எனவே அரசுத்துறை-பொதுத்துறை நிறுவனங்களை பாதுகாப்பது, என்றபடி தனியார்மயமாக்கலை எதிர்ப்பதும் கூட நமது எதிர்ப்பையும் மீறி ஆளும் வர்க்கம் நடைமுறைப்படுத்துவதை ஏற்பதாகவே முடியும். ஆகவே தனியார் மயமாக்கலை எப்படி அணுகுவது என்பது குறித்த புதியபார்வை அவசியம்.

## 4. தனியார் மயமாக்கலை ஆதரிப்பதா? எதிர்ப்பதா?

நடப்பிலுள்ள சமுதாயத்தில் தனியார்மயமாக்கலை ஆளும் வர்க்க நலனுக்கு நாம் இரையாகாத வகையிலும், நமது எதிர்கால சமுதாய நலனுக்கும் (சமுதாய மாற்றத்திற்கு) உகந்தவகையில் எச்சரிக்கை உணர்வோடு கொள்கை நடைமுறைகளை வகுப்பது அவசியமென்றாகிறது. புரட்சிக்கு பிந்தைய நாடுகளில் எவ்வாறு அங்குள்ள அரசியல் சமுதாய நடைமுறைகள் (அரசு முதலாளித்துவம் அழிந்து) தனி உடைமைக்கு இடமளித்தன. எவ்வாறு தனியார் உடைமை வடிவம் தோன்றி தவிர்க்க இயலாத விதியாகியது? அதன் தொடர்ச்சியாகவே தனியார் மயமாக்கல் - தனிஉடைமையாக்கல் - கைக்கொள்ள ஊக்கமாகிறது எனவும் நாம்புரிந்து கொள்ளலாம். தனியார் மயமாக்கல் எதிர்த்தால் தனியுடைமை ஒழிப்பு ஏன் ரஷ்யா சீனாவில் தோற்றது? ஒழிக்கமுடியுமா எனும் கேள்வியாக எஞ்சிவிடுவது காணத்தக்கது.

நமது நோக்கில் சி.பி.ஐ. சி.பி.ஐ.எம் மற்றும் சி.பி.ஐ.எம்.எல் (குழுக்கள்) பிரிவினர் ஏதோ ஒரு விதத்தில் தனிவுடமைச் சிந்தனை மேலோங்கியே உள்ளதென கடந்த உறவு இதழ்களில் முன்வைத்துள்ளோம். குறிப்பாகச் சொன்னால் புதிய சனநாயகப்புரட்சியை முன்வைப்பது கூட எதார்த்த சமூகத்தில் மட்டுமல்ல புரட்சிக்கு பின்பும்கூட சொத்துடமையை வளர்ப்பது தான். உலகில் நடைபெறும் மாற்றத்தில் சொத்துடமை சிந்தனையை அழிப்பதாக இருக்க வேண்டும் என்பது தெளிவு. அதைநோக்கிய வகையில் தனியார் மயமாக்கல் பற்றிய குறிப்பான திட்டம் எதுவும் பொதுவுடமை இயக்கங்களிடம் இல்லை. கடந்த காலத்தில் ரஷ்யாவில் சீனாவில் என்னமாதிரியான நடைமுறைகள் கையாளப்பட்டன். இன்று அவற்றை அனுபவமாகக் கொண்டு அதைவிட மேலானதாக சமுதாய மாற்றத்தை கொண்டுவரும் குறிப்பாக எதுவும் இல்லை. இத்தகைய தனியார் மயமாக்கல் எதிர்ப்பு வருந்தத்தக்கது. எனவே நமது எதிர்ப்பையும் மீறி நாம் ஏற்றுக்கொள்ளும் விதியாவதும் தவிர்க்க இயலாது.

ரஷ்யப் புரட்சிக்கு தலைமை தாங்கிய லெனின் மற்றும் அவர் வழிமுறையை ஏற்றவர்கள் புரட்சிக்கு முந்தைய கட்டத்திலேயே நகரம், கிராமம் போன்றவற்றில் சோவியத்துக்களை உருவாக்கினர். அதுவே புரட்சிக்கு பிந்தைய சமுதாயத்தில் (அனைத்து அதிகாரமும் சோவியத்துக் களுக்கே என்றபடி) அமைந்த அரசதிகாரத்திற்கு கருவாக விளங்கியது.

படிப்பகம்

www.padippakam.com



இந்த அரசதிகாரத்தின் மூலம் தான் படிப்படியாகவும், உடனடியாகவும் பொதுத்துறை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. இந்நிறுவனங்கள் தான் வர்க்கங்களற்ற சமுதாயம் நோக்கிய பயணத்திற்கு முதல் கட்டமாகவே கருதினார். வர்க்கங்களை மறையச் செய்வதற்கான நடைமுறையின் ஓர் அங்கமாகும். எனவே இக்கட்டத்தில் வர்க்கப் போராட்டம் என்பது இதுவரை வரலாற்றில் பார்த்தவற்றை விட சிக்கலான ஒன்றாகிறது.

ஏனென்றால் சமுதாயத்தில் ஒரு தனிமனிதன் தனது திறமையையே மூலதனமாக்கி, தனிச்சலுகை எனும் விதத்தில் ஒருவரை மற்றவர் சுரண்டுவதாக - அரசின் அதிகாரம் பயன்படலாகாது - வாய்ப்பு உள்ளது - என்பதில் லெனின் தெளிவாக இருந்தார். இருந்த போதிலும், ஒவ்வொரு துறையிலும் படிப்படியாக அதிகாரத்துவப் போக்கு தலையெடுத்தது. இப்போக்கு சமுதாயத்தில் புதிய ஆளும் வர்க்கமாக உருவாகக் கூடும்; (அதிகார வர்க்கம்) அதை தவிர்க்கும் நோக்கில் நிர்வாகத்தில் நடைபெறும் சிக்கல் சிரமங்கள், உற்பத்தி, விற்பனை ஆகியவற்றை முறையாக பதிவு செய்வது. அவற்றை (கணக்குகளை) வெகுசனங்கள் தெரிந்து கொள்ளும் வகையில் மக்கள் கண்காணிப்புக் குழுக்களை நிறுவினார். அதன் செயலை ஊக்கப்படுத்தினார்.

இவ்வாறு லெனினால் கட்சிக்கும் அரசுக்குமான உறவு, வெகுசனங்களுக்கும் அரசு மற்றும் கட்சிக்கான உறவு வலை பின்னப்பட்டது. இதுவும் லெனினுக்கு பின்னரான காலத்தில் சிக்கலான ஒன்றாகியது. லெனினது கடைசிக்கால கடிதங்களில் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியில் எழும் பிளவு வருங்கால சமுதாயத்தை சோசலிச நிர்மாணப் பணிகளை பாதிக்கும் எனவும் கருதினார். இது குறித்து பல ஆலோசனைகளை லெனின் எழுதினார். அவை கட்சியின் முன்னால் - மத்தியக் கமிட்டியில் முறையாக விவாதத்திற்கு வைக்கப்பட்டதாக தெரியவில்லை. இதில் மிக முக்கியமானது, ஸ்டாலின் டிராட்ஸ்கி மற்றும் தோழர்களின் மனநிலை குறித்து சொன்னதும் காணத்தக்கது. டிராட்ஸ்கி, ஸ்டாலின் இடையிலான முரண்பாடு சோசலிச சமுதாயத்தில் மிகப்பெரிய பிளவை உடனடியாக உண்டாக்கவில்லையெனினும் பாதிக்கவே செய்தது குறிப்பிடத்தக்கது. மேலும் ஸ்டாலினை கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து நீக்கி விட்டு வேறொருவரை, தோழர்கள்பால் அன்பும் பரிவும் காட்டும் தோழர் ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று ஆலோசனை சொன்னார். ஸ்டாலினிடம் காணும் நெளிவு சுளிவற்ற அணுகுமுறைகளே பின்னாளில் கராராக நடப்பது என்றபடி அதிகாரத்துவப் போக்கு வளர ஏதுவாயிற்று. இதுலெனின் எதை தவிர்க்க நினைத்தாரோ, அது நடந்தேறி உள்ளது. ஏன் "பாட்டாளி வர்க்க சகாப்தத்தில் அரசியலும் பொருளியலும்" எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்து கூட உலக கம்யூனிச இயக்கத்திற்கு விவாதத்திற்கான முன் வைக்கப்பட்ட முடிவுபெறாத கட்டுரையும்-ஆலோசனையும் இங்கு கவனம் கொள்ளத்தக்கது.

லெனினது ஆலோசனைகள் புறந்தள்ளப்பட்டன. அவர் எதிர்பார்த்ததை விட பின்னடைவையே சந்தித்தது என்று இன்றைய நிலைமைகளிலிருந்து

படிப்பகம்

www.padippakam.com



தெரிந்து கொள்ளலாம். இது உடனடியாக இல்லையெனினும் நடந்தேறிவிட்டது.

ஸ்டாலின் பற்றி மாவோ விமர்சனம் செய்யும் முன்னதாகவே கிராம்சி (இத்தாலி; ஸ்டாலினுக்கு பகிரங்கமாகவே விமர்சன கடிதம் எழுதினார். தோழர் லெனினால் உருவாக்கப்பட்ட கட்சி ஸ்டாலின், டிராட்ஸ்கி கையில் தனிப்பட்ட முரண்பாடுகளுக்காக சண்டையிட்டு, பாட்டாளி வர்க்கத்தின் முன்னுள்ள கடமைகளை சிறுமைப்படுத்தி வருகின்றனர். இருவர் முரண்பாடு உடன் களையப்படவேண்டும். ரஷ்யாவை காப்பாற்ற வேண்டும் என கருதினார். டிராட்ஸ்கியை ஸ்டாலின் ஒதுக்குவதில் வெற்றி பெற்றார். புகாரின் விவசாயிகளை கூட்டுப் பண்ணைமயமாக்குதல் குறித்த பிரச்னையின் காரணமாக பழிவாங்கப்பட்டார். கிராம்சி ஸ்டாலின் தலைமையிலான ரஷ்யா சோசலிசத்தை நோக்கி செல்கிறதா என வெளிப்படையாக ஐயம் தெரிவித்தார். அதிகார வர்க்கம் மேலாண்மை பெற்றதாகவே கருதுவதாக தெளிவுபடுத்தினார்.

லெனின் காலத்திலேயே கிராம்சி முன்வைத்த தொழிலாளர் கவுன்சில் செயல்பாடு குறித்தும் பொதுவுடமை இயக்கங்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை. லெனின் இதை கணக்கில் கொள்ள வலியுறுத்தினார். லெனின் முன் வைத்த சோவியத்து புரட்சிக்கு முந்தைய கட்டத்தில் புரட்சிக்கு முன் பாட்டாளி விவசாயி வர்க்க சர்வாதிகாரமாக நிறுவுவதற்கு உதவியது. ஆனால் கிராம்சி முன் வைத்த தொழிற்சாலை கவுன்சில் அதைவிட மேலான ஒன்றாகவே இன்று கருத இடந்தருகிறது. மார்க்ஸ், மனித அறிவு பொருள் உற்பத்தியிலிருந்தே பிறக்கிறது என்பார். அதையே கிராம்சி வளர்த்தெடுத்தார் என்றே கருதலாம். ஆகவே தான் அவர் பாட்டாளி வர்க்கம் புரட்சிக்கு பின்னால் ஆளும் வர்க்கமாக ஒழுங்கமைய வேண்டுமெனில் புரட்சிக்கு முன்பே பயிற்சி அளிக்க வேண்டும் என்றார். கிராம்சியின் கருத்துப்படி பாட்டாளி வர்க்கம் சர்வாதிகாரம் செலுத்தும் - ஆளும் வர்க்கமாக ஒழுங்கமைவது என்பதை அரசியல் அதிகாரப் பிரச்னையாக மட்டும் கருதவில்லை. இதற்கும் மேலாக பொருள் உற்பத்தியை நிறுவனமையப்படுத்தும் செயலாகவே கருதினார். உற்பத்தி, கொள்முதல், பரிமாற்றம் விற்பனை உள்ளிட்ட அனைத்து விசயங்களிலும், நமது இலட்சிய நோக்கிற்கு ஏற்ற வகையில் மனித உறவுகளை - உற்பத்தி உறவுகளை கட்டமைக்கும் எதிர்கால சமுதாயத்திற்கான பயிற்சித்தளமாக கருதினார்.

இது இயல்பாகவே தனது அரசியல் மேலாண்மையை தொழிலாளி வர்க்கத்தினர் பெறுவதாகிறது. மேலும் மூளை உழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் இடையிலான முரண்பாட்டை தவிர்ப்பதும் ஆகும். அதாவது அதிகார வர்க்கத்தை உருவாகவிடாமல் முளையிலேயே கிள்ளி எறிவதும் ஆகும்.

இதை கிராம்சி புரட்சிக்கு முன்பே 1919-களில் நடைமுறை சோதனையாக செய்து காட்டினார். அதாவது முதலாளிகளின் தொழிற்சாலைகளில் (இத்தாலி யிலுள்ள டியூரின் நகரத்தில்) தொழிற்சங்க முன்னோடிகள் பங்கேற்கும் தொழிலாளர் கவுன்சில்கள் அமைத்தார். இக்கவுன்சில் நிர்வாகத்தில் அனைத்து துறைகளிலும் மேற்பார்வையாளர்கள் - அதிகாரிகள் - தேவையற்ற தாக்கியது.

படிப்பகம்

www.padippakam.com



தொழிலாளர்கள் சரியான நேரத்தில் வருவது, உற்பத்தி இலக்கு மற்றும் விற்பனை மற்றும் இதர யாவற்றையும் தாமே மேற்கொண்டனர். இதன் மூலம் தொழிற்சாலையின் லாபம், நஷ்டம் தொழிலாளர்கள் தெரிந்து கொள்ள உதவியது; தொழிலாளர்கள் உழைப்பை அபகரிக்கும் உபரி ரகசியம் பகிரங்கமாகியது. இத்தகைய கவுன்சிலின் கீழான உற்பத்தி நடைமுறை சோசலிச அதிகாரத்தை மட்டுமல்ல - சோசலிச சமுதாயத்தை - உறவை - உருவாக்கும் சோதனை மற்றும் உற்பத்தித்தளமும் ஆகிறது கவனம் கொள்ளத்தக்கது. கிராம்சி தலைமையிலான தொழிலாளர் கவுன்சில் கைகளில் ஆறெழு மாதங்களில் தொழிற்சாலைகள் வந்துவிட்டன. ஆளும் வர்க்கம் என்ன செய்வது என்று திணறியது. பின்னர் தொழிலாளர்கள் மீது வன்முறை ஏவியது. 'கிராம்சியை கைதுசெய்து சிறையில்டைத்தது. தொழிலாளர் கவுன்சில்களை களைத்தது; அதை இயங்கவிடாமல் செய்தது. தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு தருவதாகச் சொல்லி (சீர்திருத்தம்) சமரசம் செய்து வெற்றி பெற்றது. (தொழிலாளர்களுக்கு தொழிற்சாலை நிர்வாகத்தில் பங்குதரவேண்டும் என்ற சீர்திருத்த முயற்சி மேற்கொள்ள வேண்டும் என உலகவங்கி நிபுணர் வலியுறுத்துவது இங்கு கவனம் கொள்ளத்தக்கது. (தினமணி 10-1-2000)) காரணம் தொழிலாளர் கவுன்சில்களை வழிநடத்த அப்போது வலிமையான கட்சி இல்லை என நினைத்தார். அதுவே உண்மையும் கூட.

இந்த கிராம்சியின் முயற்சி வருங்கால பொதுவுடமை இயக்கங்கள் கவனம் கொள்ள வேண்டிய ஒன்றாகவே லெனின் கருதினார் என்பது இங்கு சிந்திக்கத்தக்கது. இன்று வரையும் கூட அம்முயற்சி மேற்கொள்ளப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இன்னொரு விசயம் கவனம் கொள்ளத்தக்கது. மாவோ ஸ்டாலின் மீது முன்வைத்த விமர்சனங்கள் - அப்படியே என்று சொல்லக்கூடும் என்றவாறு - அப்பொழுதே கிராம்சி முன்வைத்தார். குறிப்பாக, விவசாயிகள் கசக்கி பிழியப்பட்டது பற்றி புகாரினும் கிராம்சியும் சொன்னவை மாவோவின் கருத்துடன் ஒப்பு நோக்கத்தக்கது. சோவியத் சமுதாயத்தில் மாவோ சீனத்தில் நடத்தியது போல கலாச்சாரப் புரட்சி அவசியம் என்றே கருதினார்.

கிராம்சி அன்று தனிப்பட்ட முதலாளிகளின் தொழிற்சாலைகளிலேயே சோசலிச உற்பத்தியை (தேவைக்கான உற்பத்தியை) ஒழுங்கமைக்கும் கருவாக தொழிற்சாலை கவுன்சில் அமைத்து கருத்தியலான சோதனை அளவில் வெற்றி பெற்றார் என்றால் இன்று உலகெங்கும் ரஷ்யா சீனா உட்பட வளர்முக நாடுகளின் அரசுத்துறை பொதுத்துறை நிறுவனங்களில் (அரசு முதலாளித்துவத்தில்) எளிதாக செயல்படுத்த முடியும். இந்த முறையை சமுதாயத்தின் அனைத்து துறைக்கும் விரிவுபடுத்தலாம் என்பது தெளிவு. மேலும் இங்கு வாசகருக்கு நினைவுபடுத்துகிறோம் எதார்த்த சமுதாயத்தில் தேர்தல் நடைமுறைகளைக் கூட நிறுவன மயத்துவதாக நமது கோரிக்கை மற்றும் செயல்பாடு இருக்கவேண்டும் என்று உறவு 8-ல் (கட்டுரை) கடிதம் வரைந்துள்ளோம். பார்க்க படிக்க!

படிப்பகம்

www.padippakam.com



கிராம்சியின் கண்ணோட்டப்படி ஒருபுறம் தொழிற்சாலைக் கவுன்சில்கள் அமைக்கலாம். லெனின் சுட்டிக்காட்டியது போல் வெகுசனங்கள் நிர்வாகத்தை தெரிந்து கொள்ளும் வகையில் மக்கள் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கலாம். இதன்மூலம் லாபமற்ற இயங்கும் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தலாம். அவற்றில் நடைபெறும் ஊழல் நிர்வாகச் சீர்கேடுகளுக்கு முடிவு கட்டலாம். அதாவது சுருக்கமாகச் சொன்னால் நிர்வாகத்தை யாரொருவரும் அறியும் படி செய்யலாம். அதை சட்டபூர்வமான உரிமையாகவும் மாற்றலாம் - ஏனென்றால் எண்ணற்ற மக்களின் உழைப்பால் - வரியால் - பொதுத்துறை நிறுவனங்கள் (அரசு முதலாளித்துவம்) உருவாக்கப்பட்டதாகிறது. ஆகவே ஒருவிதத்தில் பார்த்தால் சாதாரணமாக ஒவ்வொரு குடிமகனும் கூட மறைமுகமான முறையில் பொதுத்துறை நிறுவனங்களுக்கு பங்குதாரர் ஆகிறார். எனவே அவர்கள் உற்பத்தி, கொள்முதல் விற்பனை, போன்ற அனைத்து விபரங்களையும் பெறுவதற்கு உரிமை உடையவரர்கிறார்.

சாதாரணமாக ஒவ்வொரு குடிமகனும் கூட கணக்கு நிர்வாகம் அறிவது இன்று சிக்கலானது அல்ல. லெனின் ரஷ்யாவில் பொதுத்துறை நிறுவனங்கள் செயல்பாடு குறித்து கண்காணிப்பிற்கு அளித்த முக்கியத்துவம் - வலியுறுத்தல் விஞ்ஞான வளர்ச்சியில் சாத்தியமற்றதாக இருந்தது என்றுகூட சொல்லாம். ஆனால் கம்ப்யூட்டர் - இண்டர்நெட் யுகத்தில் இதை எளிதாகச் செய்யமுடியும். அதுவும் கூட தகவல் பெற விரும்புவர் - (கண்காணிப்புச் செய்பவர்) எங்கோ ஒரு இடத்தில் மறைமுகமாக இருந்து கூட இண்டர்நெட் மூலம் தெரிந்து கொள்வது சமுதாயத்தின் பார்வைக்கு கொண்டுவருவது கடினமான ஒன்றும் அல்ல.

நாம் இந்தக் கட்டுரை எழுதிக் கொண்டிருக்கும் போது நமது இந்தக் கண்ணோட்டத்தை சரியானது, தேவையானது என உறுதிபடுத்தும் நிகழ்வாக வங்கி ஊழியர் போராட்ட வெற்றியை காண்கிறோம்.

இந்தியன் வங்கி, யூகோ வங்கி நஷ்டத்தில் இயங்குவது காரணமாக அரசு அவற்றை மூடிவிடலாம் என்று கருதியது. இதை கண்ட வங்கி ஊழியர்கள் சங்கம் இவ்வங்கிகள் நஷ்டமடைய காரணம் என்ன? சமுதாயத்தில் செல்வாக்குப் பெற்ற அரசியல்வாதிகள், முதலாளிகள், அதிகார வர்க்கத்தினர் (பினாமியான பெயர்களில்) வாங்கிய கடனை திருப்பிச் செலுத்தாததே என அறிக்கை விட்டனர். வங்கிகளை மூடும் அரசின் இந்த முடிவை அம்பலப்படுத்தும் வகையில் கடன்வாங்கி செலுத்தாதவர்கள். யார் யார் என பட்டியல் வெளியிடுவோம் என்றனர். இந்த அறிவிப்பால் அரசு தனது முடிவை மாற்றிக் கொண்டது என சொல்ல இயலாது; தனது முடிவை தள்ளிப்போட்டது எனலாம்.

மேலும் பொதுத்துறை நிறுவனங்களில் முறையான செயல்பாடு இருக்குமாயின் சமுதாயத்திற்கு பல்வேறு வகையான நன்மைகள் ஏதுவாகும். இது வெற்றி பெறும் பட்சத்தில் தமிழக முதல்வர் போக்குவரத்துக் கழகம்

படிப்பகம்

www.padippakam.com


நஷ்டத்தில் இயங்குகிறது; எனவே பஸ் கட்டணம் உயர்த்துவது இயலாது என்ற கருத்துக்கு இடமில்லாதது போய்விடும். பொதுத்துறை நிறுவனம் மென்மேலும் மக்களுக்கு அதிகமான நன்மை செய்வதாக இருக்க வேண்டும் என்ற கண்ணோட்டம் மறைந்து, அடுத்த மாநில பேருந்து கட்டணத்தைவிட குறைவுளள ஒப்பீட்டு நிலையப்படுத்துவதும் கூடஇல்லாது போய்விடும்.

பஸ்கட்டணம் உயர்த்துவது மூலம் மக்கள் மீது பாரம் சுமத்தப்படுகிறது ஒருபுறம் இருக்க, தனியார் பஸ் முதலாளிகள் கொள்ளை லாபம் அடிப்பதற்கு அரசே முன்னின்று உதவுவதாகவே கருதலாம். இதெல்லாம் ஒரு உதாரணம் மட்டுமே. இதேபோல் அரசுத்துறையில் அதிகாரிகள், தொழிலாளிகள் நலனுக்கான செயல்படுவதாகிறது. இவர்கள் நலனுக்காக மக்களின் பெருவாரியானோர் சுரண்டப்படுவதாக உள்ளதும் காணத்தக்கது.

இதன்மூலம் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் சமூக உணர்வின்றி, புரட்சிகரமற்ற குணாம்சம் அற்றவர்கள் என்ற சமுதாய நிலைமைக்கு முடிவுகட்டலாம். அவர்களுக்கு சமூக உணர்வும் புரட்சிகரமான குணாம்சத்தை வளர்ப்பதாகவும் இருக்கும் தொழிற்சங்கங்களின் நிலவும் பல்வேறு பிளவுகளுக்கு முடிவு கட்டலாம்.

சுருக்கமாகச் சொன்னால் சமுதாயத்தில் பொதுத்துறை நிறுவனங்களை தனியார் உடைமையாக்குவதை சாத்திய மற்றதாக்கலாம். சமுதாயத்தில் பெரும்பான்மை மக்களின் நலனுக்கு ஏற்ற வகையில் செயல்பட வைக்கலாம். இதற்கு மாறாக தனியார் உடைமை இருந்திருக்குமானால் இத்தகைய நன்மை கிடைக்காது என தெளிய வைக்கலாம். தனிவுடமை வருங்காலத்தில் - தேவையற்றது. சமுதாய நலனுக்கு மட்டுமல்ல. தொலை நோக்காக பார்த்தால் தனிமனித நலனுக்கு நல்லதும் அல்ல.

வளர்முக நாடுகளின் எதார்த்தத்தில் பொதுத்துறை நிறுவனங்கள் செயல்பாட்டின் மூலம் மக்களுக்கு நன்மை பயப்பது எடுத்துக் காட்டப்படுவது தொலைநோக்காக, சமுதாயமே ஒட்டு மொத்தமாக மாறினால் - புரட்சி நடைபெற்றால் - எப்படி இருக்கும் மனிதநேயம் வளரும் - வர்க்கங்களற்ற சமுதாயம் நோக்கிச் செல்ல வழி அமைக்கலாம் என புரட்சியின்மீது தூண்டு விசையாகும்.

எனவே தான் நமது முதன்மையான முழக்கமாக முன்வைக்கிறோம்!

★ அரசே! தனியார் மயமாக்கலை கைவிடு!

★ பொதுத்துறை நிறுவனங்களின் நிர்வாகத்தை வெளிப்படையாக்கு!

★ ஒவ்வொரு குடிமகனும் பொதுத்துறை நிறுவனங்களின் செயல்பாடு அறியும் உரிமையை சட்டமாக்கு!

★ நிர்வாகத்தில் தொழிற்சங்க முன்னோடிகளுக்கு பங்கு கொடு!

★ புதிய சமுதாயம் படைக்கும் கருவாக உழைப்பாளர் கவுன்சில் நிறுவுவோம்!

படிப்பகம்

www.padippakam.com



# அடிக்குறிப்புக்கள்

**(1)** இது குறித்த செய்திகள் லெனினது கடைசிக் கட்டுரைகள் மற்றும் கடிதங்களில் காணப்படுகிறது.

இதையே லெனினுக்கு பின்னரான காலத்தில் தோழர் ஸ்டாலின் (ரஷ்யாவிற்கு தலைமை வகித்த காலத்தில்) கூட்டுப் பண்ணை மயமாக்கலை வெளிப்படுத்தும் மிகயீல் ஷோலகவின் கன்னிநிலம் கவனம் கொள்ளத் தக்கது. அதில் லெனின் கண்ணோட்டத்திற்கு அதிலிருந்து மாறுபடும் ஸ்டாலின் கண்ணோட்டமும் பதிவு செய்யப் பட்டு உள்ளது. குறிப்பாக நாவலின் முற்பகுதியிலேயே கதைப்பாத்திரமான நகடல்னவுக்கும், கட்சியின் மாவட்ட செயலாளருக்குமான முரண்பாடாக காட்டப்பட்டுள்ளது வரலாற்றில் கவனம் கொள்ளத்தக்கது.

இதேபோல் சிங்கிஸ் ஐத்மாத்தவ் எழுதிய குல்சாரி நாவலிலும் காணலாம். அதில் காட்டப் பெறும் கதாபாத்திரம் சோரோ லெனின் கண்ணோட்டம் உடையவராகவும், தானாபாய் ஸ்டாலின் கண்ணோட்டம் உடையவராக பதிவு செய்துள்ளார். மேலும் ஸ்டாலின் கண்ணோட்டமே முதலில் சரியென கருதப்பட்டு நடைமுறைக்கு வந்தாலும் அதில் தவறு உள்ளது. சோரோ முன்வைக்கும் லெனின் கண்ணோட்டமே சரியானது என பின்னாளில் தானாபாய் கருதுவதாகவும் பதிவு செய்யப் பட்டுள்ளது. நாவல் முழுக்கவே இருவேறு கண்ணோட்டமே காண்பதாகவே உள்ளது.

**(2)** 1930, 1935-ம் ஆண்டு நிலவரங்களை வெளிப்படுத்தும் நாவல் பத்தாண்டுகளுக்கு முன் படித்த ஞாபகம். அந்த நாவலின் பெயரும்சரி ஆசிரியரின் பெயரும் சரி நினைவில் இல்லை. எனது ஒரு ஞாபகத்தின் படி மறுபிறப்பு என நினைக்கிறேன். அதில் வருமாறு தொழிலாளர்கள் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டு இருந்தனர். ஆனால் திடீரென்று பணிநிறுத்தம் செய்தனர். காரணம் தங்களிடம் காசு இருந்தும் தங்களால் புகை பிடிக்க, பீடி, சிகரெட் சந்தையில் - கடைகளில் எதுவும் கிடைக்கவில்லை. எங்களால் வேலை செய்யமுடியாது என்றனர். கட்சியினரும், அதிகாரிகளும் வந்து சமாதானம் செய்தனர். ஆவன செய்வதாக உறுதி மொழி கொடுத்தனர். வேலை நிறுத்தம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

**(3)** தனிவுடமைச் சிந்தனை எவ்வாறு பிரவாகம் எடுத்தது என்பது குறித்து லியோனித் பிரஷ்னேவின் கன்னிநிலம் வாழ்க்கை சுயசரிதம் காட்டும் சித்திரம் கவனம் கொள்ளத்தக்கது.

<u>சம்பவம் 1</u> பிரஸ்னேவ் அன்று கஜாக்ஸ் தான் மாநில செயலாளராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. காலம் 1955, 1960 ஆக இருக்கலாம். பிரஸ்னேவ் ஒரு கிராமத்தின் நியாய விலைக்கடைக்குச் சென்ற மேற்பார்வையிடுகிறார். அங்கு அப்போது கூட்டம் அதிகமாக உள்ளது. ஒருவர் இது என்ன மாவு? புழு, பூச்சியாக உள்ளது என கூச்சலிடுகிறார். பிரஸ்னேவிடமும் முறையிடுகிறார். பிரஸ்னேவ் கடைக்காரரை அழைத்து ஆவனசெய்யச் சொல்கிறார். கடைக்காரர் அவருக்கு மட்டும் நல்லமாவு கொடுத்து அனுப்பிவிடுகிறார்.

(ஆ) பிரஸ்னேவ் கால்நடை பண்ணையை மேற்பார்வையிட செல்கிறார். பொறுப்பாளர் சொல்கிறார் பிரஸ்னேவிடம். தோழரே ஒரு புறம் குழந்தைகளுக்கு பால் கிடைக்கவில்லை. இன்னொருபுறம் பால் கறக்க, மேய்க்க, பராமரிக்க ஆள் கிடைக்கவில்லை. நிலைமையை எப்படி சமாளிப்பது எனத் தெரியவில்லை என்கிறார். கவனமாக கேட்ட பிரஸ்னேவ் ஆழ்ந்து யோசித்து விட்டு சொல்கிறார். ஏன் வேலைக்கு ஆள்கிடைக்கவில்லை? கல்வி அறிவு பெற்ற யாரும் இந்தமாதியான வேலைக்கு வரவிரும்பவில்லை. மறுபடியும் ஆழ்ந்து யோசித்து சொல்கிறார். இக்கிராமத்தில் எத்தனை வீடுகள் உள்ளன. நம்மிடம் எத்தன்ன மாடுகள் உள்ளன? எனக் கோட்கிறார். தொடர்ந்து அவரே சொல்கிறார். எத்தனை வீடுகள் உள்ளனவோ அத்தனை வீடுகளுக்கு எல்லா மாடுகளையும் பிரித்து கொடுத்து விடுங்கள். வேலைக்கும் ஆள்கிடைத்துவிடும். குழந்தைக்ளுக்கும் பால் கிடைத்துவிடும் என்கிறார். நல்ல யோசனை தோழரே! அப்படியே செய்கிறேன்.

(இ) சிங்கிஸ் ஐத்மாத்தவின் அன்னை வயல், குல்சாரி இரண்டுமே மிகமுக்கியமான நாவல்கள். ருஷ்ய சமுதாயம் எப்படி பரிணாம வளர்ச்சியை அடைந்தது என அறிவதற்கு அரிய வரலாற்று ஆவணமா கவே பார்க்கலாம்; படிக்கலாம். ஆராய்ந்து புதிய செய்திகளை முன்வைக்கலாம். இங்கு அன்னை வயல் நாவலிலிருந்து செய்தி.

போரின்போது கூட்டுப்பண்ணையின் விளைபொருட்கள் முதன்மையாக யுத்த வீரர்களுக்கே அனுப்பப்பட்டது. எனவே கூட்டுப்பண்ணை ஊழியர்களுக்கு சம்பளம் கூட கொடுக்க இயலவில்லை. குறைந்தபட்சம் தங்களது ஊழியர்களுக்கு உயிர்வாழக்கூட

படிப்பகம்

www.padippakam.com



உணவு தானியங்கள் போதுமான அளவு கூலி யாக அளிக்க முடியவில்லை. பல நாள் பட்டினி கிடந்து பெரியவர்கள் சமாளித்தனர். சிறுவர்கள் முதியவர்கள் நிலைமையை சமாளிக்க முடியாமல் தவித்தனர். இந்தச் சூழலில் ஒரு பெண் கூட்டுப்பண்ணை அதிகாரிகளிடம் நிலைமையை சமாளிப்பது குறித்து விவாதிக்கிறாள். முடிவாக அந்தப் பெண் தரிசு நிலங்களை பண்படுத்தி பயிரிடலாம் என முடிவுக்கு வருகிறாள். இதை கட்சியின் மாவட்ட கமிட்டியிடம் அனுமதி பெறவிரைகிறாள். அங்கு தனது முடிவை தெரிவிக்கிறாள். மாவட்ட கமிட்டியை சேர்ந்த ஒருவர் அதற்கு பதிலளிக்கிறார்! நீ ஸ்டாலினுடைய கூட்டுப்பண்ணை விதிகளை மீறுகிறாய்! அவ்விதிகள் எக்கேடு கெட்டும் போகட்டும்! நாங்கள் இறந்து போனால் யுத்தத்தில் ஈடுபட்ட வீரர்களுக்கு யார் உணவூட்டுவார்களாம்? குழந்தைகளை முதியவர்களை நாங்கள் எப்படி காப்பாற்றுவ தாம்? என்று பலத்த கூச்சலி டுகிறாள். அதற்கு பதில், எங்கே நீ மக்கார் (குதிரை) கன்றுகளை மேய்க்காமல் இருப்பது தெரியுமா? அதாவது நீ ஸ்டாலினுடைய விதியை மீறுவது மூலம் சைபீரிய சிறைக்கு அனுப்பப்படுவாய் என கூறுகிறார். முடிவாக அந்தப் பெண்ணின் கோரிக்கை ஏற்கப்படுகிறது.

**(4)** குல்சாரி நாவலிலிருந்து : ஆட்டுப் பண்ணை பொறுப்பாளர் தானாபாய். பொறுப் பேற்கும் போது வருடத்திற்கு இத்தனை குட்டிகள், ஆட்டுரோமம் தரமுடியும் என உறுதியளிக்கிறார். ஆனால் அவர் உறுதி கொடுத்தது கூட மாவட்ட கட்சி அமைப்பாள ரும் தனது நண்பனுமான சோரோ வேண்டிக் கொண்டதன் பெயரில் தான். தானாபாய் ஒரு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்.

ஆட்டுப்பண்ணையை மேற்பார்வையிட கூட்டுப் பண்ணை அதிகாரி வருகிறார். அப்போது பண்ணை நிலவரம் குறித்து சர்ச்சை நடக்கிறது. அதிகாரி கேட்கிறார். நீ ஒரு கம்யூனிஸ்டாக இருக்க ஆடுகள் சாக காரணம் என்ன? ஆடுகளுக்கு நான் கம்யூனிஸ்ட் என்பது தெரியாது. என கடுப்புடன் சொல்கிறான். என்ன வசதி செய்து கொடுத்திருக்கிறீர்கள் என்ன செய்வது என்கிறான். அதிகாரியோ நீ சோவியத் அரசாங்கத்தின் எதிரி என்கிறான். ஒப்புக் கொள்கிறேன். நீ மட்டும் என்னவாம் தோல் கோட்டு அணிந்த புதிய பிரபு என்கிறான்.

**(4)** பிரபுக்குல பாட்டாளி வர்க்கம் : இங்கிலாந்து முதலாளி வர்க்கம் சென்ற நூற்றாண்டில் உலக மேலாண்மையில் பெரும்பங்கு வகித்தது. இதன் காரணமாக முதலாளி வர்க்கமானது தனது நாட்டு தொழிலாளிக்கும் சுரண்டலில் பங்கு கொடுத்தது. அதாவது கூடுதலான கூலி மற்றும் வசதி செய்து கொடுத்து அவர்களது புரட்சிகரமான தன்மையை மழுங்கடித்தது. இவர்களை மார்க்சும் எங்கெல்சும் பிரபுக் குல பாட்டாளி வர்க்கம் என அழைத்தனர்.

பின்னாளில் இது எல்லா ஏகபோக முதலாளித்துவ நாடுகளிலும் காண்பதாக லெனின் சுட்டிக்காட்டினார். அதுவே சந்தர்ப்பவாதம் வெற்றி பெறுவதற்கு வர்க்க வேராய் ஐரோப்பாவில் இருந்ததையும் எடுத்துக் காட்டினார்.

ருஷ்யா, சீனா போன்ற நாடுகளிலும் கூட தொழிலாளிகள் மேலே நாம் காட்டிய வாழ் நிலையே கொண்டுள்ளனர். இவர்கள் அந்நாடு களிலுள்ள விவசாயி, கூலி விவசாயிகளை விட மேலான வாழ்நிலை கொண்டுள்ளனர்.

நம் போன்ற நாடுகளில் அரசுத்துறை, பொதுத்துறை நிறுவனங்கள் தோற்றுவிக்கப் பட்டதன் காரணமாக மேலே காட்டிய வர்க்கத்தினர் தோன்றினர்.

இவ்வர்க்கம், நாடு, தேசம் என்ற வித்தியாசம் இல்லாமல் எங்குமே காணக்கூடியதாக உள்ளது. இவர்கள் மார்க்ஸ் கூறியது போல இழப்பதற்கு ஏதுமில்லாத வர்களாக இல்லை. மாறாக கூடுதல் சம்பளம் - இதர வசதிகள் காரணமாக சாரத்தில் சிறு உடைமையாளர்களாகவே உள்ளனர். இவ்வர்க்கமே உலகெங்கும் நிறைந்து உள்ளது. இதன் பிரதிபலிப்பாகவே இடதுசாரி இயக்கம் உலகெங்கும் பலவீனமடைந்து சந்தர்ப்பவாதம் பெரும்சக்தியாக திகழ்கிறது.

**(5)** ஒரு நாடு மற்றொரு நாட்டை சுரண்டுவது - பெறும் லாபம் தனிப்பட்ட முதலாளிக்கு சொந்தமாக இருப்பது - ஏகபோக முதலாளித்துவம் அல்லது ஏகாதிபத்தியம் என்பர். இச்செயலை அரசே முன்னின்று செய்து, அதன்மூலம் பெறும் செல்வம் சமூகத்தின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் அனுபவிக்கும் வகையில் அமைந்ததால் சமூக ஏகபோக முதலாளித்துவம் என அழைக்கப்பெற்றது. இச்சொல் 1950-களின் பின்னர் அதிகமாக பேசப்பட்டாலும், லெனின் ஏகாதிபத்தியமும் சோசலிசத்தின் பிளவும் எனும் கட்டுரையில் பயன்படுத்தி உள்ளார். சொல்லில் சோசலிசம் செயலில் ஏகாதிபத்தியம் என்ற சொற்றோடரையே - சமூக ஏகாதிபத்தியம் என்பதற்கு பயன்படுத்தினார்.

படிப்பகம்

www.padippakam.com



## உறவு வாசகர் சந்திப்பு

5-12-99 அன்று மதுரை உதயம் கல்வி மையத்தில் தோழர் சண்முகநாதன் தலைமையில் உறவு வாசகர் சந்திப்பு நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு பொதுவுடைமை அமைப்புக்களைச் சேர்ந்த முன்னோடிகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து கலந்து கொண்டனர். குறிப்பாகச் சொன்னால், ம.க.இ.க.வை சார்ந்த (மதுரை) தோழர் சசிகுமார், சி.பி.ஐ. (எம்.எல்) ஐ சார்ந்த தோழர் சீனிவாசன், சி.பி.ஐ. (எம்.எல்.) (ரெட்பிளாக்)ஐ சார்ந்த பாலசுப்பிரமணியன், 'பகிர்வு' ஆசிரியர் தோழர். முருகதாஸ் விருது ஆசிரியர் குழுவைச் சேர்ந்த தோழர் இந்திரா... உட்பட சுமார் 30 பேர் கலந்து கொண்டனர்.

'உறவு'-ன் திறனாய்வு குறித்து தோழர்கள் சே.கோச்சடை, ராசமுருகுபாண்டியன், சிலப்பதிகாரம் உரை நிகழ்த்தினர். மேலும் பலரும் 'உறவு'-ன் பணியை பாராட்டியும் விமர்சனமாகவும் கேள்வியாகவும் தனது கருத்துக்களை முன் வைத்தனர். இறுதியாக உறவு ஆசிரியர் தோழர். பாலசுப்பிரமணியன் கேள்வி மற்றும் விமர்சனங்களுக்கு பதிலாகவும், தோழர்கள் முன் வைத்த ஆலோசனைகளை கணக்கில் கொள்வதாகவும் ஏற்புரை நிகழ்த்தினார். கூட்டம் 4-00 மணிக்கு துவங்கி இரவு 7-00 மணி வரை சிறப்புற நடைபெற்றது.

நமது அழைப்பை ஏற்று உறவு வாசகர் சந்திப்பில் கலந்து கொள்ள இயலாமை குறித்து பல்வேறு கடிதங்கள் 'மார்க்சிஸ்ட்' இதழ் நிர்வாகி சென்னை தோழர். D. லெட்சுமணன், மதுரை தோழர் சுவாமிநாதன் தமிழ் அமிழ்தம் ஆசிரியர் தோழர். தி. செந்தமிழ், கவிஞர். தோழர் பழமலய் (விழுப்புரம்) அறந்தாங்கி தோழர் செம்மலர் நடராசன்...

தங்களது நிலையை தெளிவுபடுத்தி கடிதம் மூலம் தெரிவித்த தோழர்களுக்கு நன்றி!

வரும் உறவு வாசகர் சந்திப்பில் கலந்து கொள்வீர்கள் என நம்புகிறோம். நன்றி!

**கருத்துக்கள் /**
**விமர்சனங்கள் / தொடர்புக்கு**

**உறவு**

கா.சே. பாலசுப்பிரமணியன்,
6/5, கீழக்சொட்டியார்தெரு, காரைக்குடி-630 001.
தொலைபேசி : 04565-36765

படிப்பகம்